# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1903 - 2015 පෙබරවාරි මස 20 වැනි සිකුරාදා - 2015.02.20

*1903 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 210 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 211 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 215 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் விற்பனை

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 2015.02.28 ஆந் திகதி இந்நீதிமன்ற வளவினுள் வைத்து மு. ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

2. யாராவது இங்கு குறிப்பிட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமை கோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. பொது மக்கள் நீதிமன்றத்தின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

4. ஏல விற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை நீதிமன்றம் தன்னகத்தே வைத்திருக்கும்.

5. விற்கப்பட்ட பொருட்களுக்கு பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் தேசிய ஆள் அடையாள அட்டையுடன் சமுகம் தர வேண்டும்.

பீ. சிவகுமார்.

நீதிவான் மன்றம்,
யாழ்ப்பாணம்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பீஆர் இலக்கம் | பொருட்களின் விபரம் | மொத்த எண்ணிக்கை | வகை | பற்றுச்சீட்டு இலக்கம்/வகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 33956 | | தண்ணீர் ரப் | 01 | S -Ion (1/2") | - |
| 2 | 33034 | PR.182/13 | சவள் | 02 | -- | - |
| 3 | AR.790/13 | PR.147/13 | சிறிய ஸ்பீக்கர் | 01 | -- | - |
| 4 | AR.132/14 | PR.109/14 | கல்வனைஸ் பைப் | 02<br>30'-1<br>20'-1 | -- | - |
| 5 | 27259 | PR.138/11 | எரிவாயு சிலிண்டர்<br>சுட்டியல்<br>சாவி | 01<br>01<br>01 | Lanka gas | - |
| 6 | 30986 | PR.72/13 | ஒயில் கான் | 02Can (4l) | CEYPETCO | - |
| 7 | 34067 | | பெயின் ரின் | 01(500ml) | Multi lac | - |
| 8 | 32936 | PR.136/13 | படித்தராசு | 01 | -- | - |
| 9 | 16967 | PR.136/09 | கமரா (Film Model) | 01 | Canon | INC5306001 |
| 10 | R.820/12 | PR.149/l2 | தொலைக்காட்சிப் பெட்டி | 01 | JVC | MODEL3882CR |
| 11 | AR.108/14 | PR.174/14 | கமரா | 01 | சொனி (Sony) | 4421524 |
| 12 | AR.156/14 | PR.06/14 | தண்ணீர் மோட்டர் | 01 | - - | - |
| | | PR.07/14 | தண்ணீர் மோட்டர் | 01 | -- | - |
| 13 | AR.666/13 | PR.11/13 | தண்ணீர் மோட்டர் | 01 | -- | - |
| | | PR.13/14 | தண்ணீர் மோட்டர் | 01 | -- | - |
| | | PR.14/14 | தண்ணீர் மோட்டர் | 01 | -- | |
| | | PR.15/14 | தண்ணீர் மோட்டர் | 01 | -- | - |
| 14 | AR.65/14 | PR.69/13 | மடிக்கணினி | 01 | Acer | S/N LXPWK 02117016237 E 31601 |
| 15 | 25548 | PR.82/11 | மடிக்கணினி | 01 | Sony | S/N 27515941 3001472 |
| 16 | 35214 | PR.107/14 | கைத்தொலைபேசி | 01 | HUAWEI | 862074024 252639 |

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பீஆர் இலக்கம் | பொருட்களின் விபரம் | மொத்த எண்ணிக்கை | வகை | பற்றுச்சீட்டு இலக்கம்/வகை |
|---|---|---|---|---|---|---|
| 17 | 35585 | PR.188/14 | கைத்தொலைபேசி | 01 | SAMSUNG | 355358051841602 |
| 18 | 30461 | PR.18/13 | கைத்தொலைபேசி | 01 | SAMSUNG | 35321/504/ 507975/0 |
| 19 | 33955 | | கைத்தொலைபேசி சார்ஜர் | 01 | -- | - |
| 20 | 34887 | PR.165/14 | பித்தளை, குத்துவிளக்கு அடிப்பாகம் | 01 | -- | - |

| தொடர் இலக்கம் | வாகன இல. | வாகன வகுப்பு | வகை | நிறம் | செசி இலக்கம் | என்ஜின் இலக்கம் | மதிப்பீட்டு பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NPHD-6579 | மோட்டார் சைக்கிள் | Pulsar(150) | சிவப்பு | DHVBJM53821 | DHGBJM53746 | 7450 |
| 2 | 49CC | மோட்டார் சைக்கிள் | 49CCHero Streem | சிவப்பு | MD304G2BR4C974121 | EE047327 | 3650 |
| 3 | MOFED 49CC | மோட்டார் சைக்கிள் | Streem 49CC | சிவப்பு | LASTXKA17 A0003609 | IP39RMAl0012609 | 6100 |

| தொடர் இலக்கம் | வாகன இல. | வாகன வகுப்பு | வகை | நிறம் | செசி இலக்கம் | என்ஜின் இலக்கம் | மதிப்பீட்டு பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | EPMB-0374 | மோட்டார் சைக்கிள் | Kinetic Boss V2 | சிவப்பு | GC51002498. | GC51002856 | 1400 |
| 2 | ---- | மோட்டார் சைக்கிள் | JP.MotoLanka | சிவப்பு | LJPPCAL0380A00002 | ------ | 1200 |
| 3 | NPMI 9887 | மோட்டார் சைக்கிள் | TVS Star | சிவப்பு | MD625GR5251H40216 | OFSH51220136 | 2100 |

2-526

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சுப்ரீம் மைக்ரோ கிறெடிட் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : பீவீ 101644

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, ஒற்றோபர் 24

*பதிவு முகவரி* : மட்டம் 33, மேற்குக் கோபுரம், எக்சலன் சதுக்கம், உலக வர்த்தக மையம், கொழும்பு 1

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

2-485

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சைனா டவுன் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : பீவீ 101999

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, நவெம்பர் 07

*பதிவு முகவரி* : இல. 15/5, ரூபசிங்க மாவத்தை, நெதிமால, தெஹிவளை

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

2-486

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கிருலு சிலோன் டீ (பிறைவேட்) லிமிடெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 102135
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, நவெம்பர் 13
*பதிவு முகவரி* : இல. 61/1, ஹைலெவல் வீதி, கொழும்பு 6

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

2-487

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : லும்பினி டீ எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 101515
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.10.15
*பதிவு முகவரி* : லும்பினி இஸ்டேட், கொலபெவனிகம, தெனியாய (பிறைவேட்) லிமிடெட்

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

2-488

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : வொல்டஸ் லொஜிஸ்டிக் (பீவீரீ) எல்ரீடி
*பதிவிலக்கம்* : பீவீ 102709
*பதிவு முகவரி* : இல. 180/ஏ, டி சேரம் மாவத்தை, வெலிவிட்ட வீதி, மாலபே

கம்பனிச் செயலாளர்.

2-493

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஸ்பிரிட் ப்ரொபர்ட்டி குரூப் (பிறைவேட்) லிமிடெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 101712
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, நவெம்பர் 14
*பதிவு முகவரி* : இல. 22, சிரிப்பா ஒழுங்கை, கொழும்பு 5

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

2-489

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

வில்லா கபுரு (பிறைவேட்) லிமிடெட் என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2015, சனவரி மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் கம்பனி பதிவு இலக்கம் பீவீ 103372 என்றும் அதன் பதிவு அலுவலகம் இல. 58/1, புனித ஜோசப் மாவத்தை, நீர்கொழும்பு, இலங்கை எனும் முகவரியில் அமைந்துள்ளது என்று இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

எம் அன்ட் ஏ கம்பனி செக்ரட்ரீஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 28 (2 ஆம் மாடி),
டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

2-483

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 49, "பிரின்ரோஸ்", நீர்கொழும்பு வீதி, கந்தானை எனும் இடத்தில் வதியும் அன்ரனி ரொஹான் பெரேரா அமரதுங்க ஆகிய என்னால் கடலான, குடாகுசும கன்னியாஸ்திரி மடத்தைச் சேர்ந்த சிஸ்ரர் மேரி எஸ்தர் சகோதரிக்கு அதிகாரமளிக்கப்பட்ட 1992, ஓகத்து மாதம் 17 ஆந் திகதியன்று கொழும்பு பிரசித்த நொத்தாரிசு தடதெனிய ஆரச்சிகே க்ளென்ரோய் பெரேரா ரணசிங்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 131 ஆம் இலக்க அற்றோணித் தத்துவம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றதென்பதையும், இதன் பின்னர் அந்த அற்றோணித் தத்துவத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்

எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்ரனி ரொஹான் பெரேரா அமரதுங்க.

*2-473*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிலாபம், கொரயாவத்த, இலக்கம் 112 இல் வசிக்கும் வர்ணகுலசூரிய இனோக்கா மாரியன் பர்னாந்து (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 737902153V) ஆகிய நான், சிலாபம் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எ. ஹிலரி பிரசன்ன பர்னாந்துவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2288 ஆம் இலக்கமும் 2009.04.01 ஆந் திகதியும் கொண்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தின் மூலம் மேற்படி சிலாபம், கொரயாவத்த, இலக்கம் 112 இல் வசிக்கும் லுவிஸ்புரகே டோனி ரொபின் பர்னாந்து என்பவருக்கு (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 701411633V) அளித்த சகல தத்துவங்களையும் இன்று முதல் இரத்துச்செய்து விட்டேன் என்பதையும் இதனால் அவர் இந்த அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் கீழ்க்கண்ட திகதி முதல் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கையும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதையும் அதற்கு நான் எவ்வித பொறுப்பும் ஏற்க மாட்டேன் என்பதையும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

வர்ணகுலசூரிய இனோக்கா மாரியன் பர்னாந்து.

*2-512*

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : மோட்டரோலா சொலுஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 1295
கம்பனியின் பதிவு முகவரி : இல. 214, நாவல வீதி, ராஜகிரிய
கம்பனியின் புதிய பெயர் : சிப்ரா டெக்னொலொஜிஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பெயர் மாற்றிய திகதி : 26.01.2015

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 2,
2015, சனவரி 29.

*2-571*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பிரிசியஸ் ஜெம் டெஸ்ட்டிங் லெபோரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 103015
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, சனவரி 12
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 251/19, கிருல வீதி, கொழும்பு

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*2-566*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கோவெகேஷன் லங்கா கொ. (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 73598
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010, ஓகத்து 12
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : ஜெட்வின் இல்லம், இல. 46/26, நவம் மாவத்தை, கொழும்பு 2

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*2-567*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மட்டக்களப்பு, செங்கலடி, பதுளை வீதியைச் சேர்ந்த ஐயாதுரை பவாணி (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 566162350V) ஆகிய நான், இலங்கை, மட்டக்களப்பு, செங்கலடி பிரதான வீதி, கோபால கிருஷ்ணன் வீணா (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 787863728V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். அமீன் என்பவரால் 4175 ஆம் இலக்க 2014.04.17 ஆந் திகதிய அத்தாட்சிப்படுத்தப்பட்ட மட்டக்களப்பு பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 2014.04.21 ஆந் திகதிய புத்தக இலக்கம் 22, பக்கம் 28 இல் பதியப்பட்டதான அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்துள்ளேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகலருக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

ஐயாதுரை பவாணி.

*2-540*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2014.12.11 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : பாலகூன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 102769
*பதிவு முகவரி* : இல. 59, கிறகரீஸ் றோட், கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-538

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி பற்றி இத்தால் அறிவிக்கப்படு கின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சீ ஜே எஸ் எல் என்ரபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 102877
*பதிவுத் திகதி* : 2014, திசெம்பர் 19
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 550/1ஈ, போகுந்தர றோட், எரவ்வெல, பன்னிபிட்டிய

ராஜபக்ஷ ஆராச்சிகே டொன் லசந்த ராஜபக்ஷ,
முகாமையாளர்.

2-535

---

## செனஸ்றோ குறூப் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கூட்டிணைத்தல் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : செனஸ்றோ குறூப் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 102421
*கூட்டிணைப்புத் திகதி* : 2014, நவெம்பர் 26
*பதிவு முகவரி* : இல. 125/5, ஃப்ரேஸ் வீதி, கொழும்பு 14

ஜீ. பீ. ஐ. உதயங்கனி,
கம்பனிச் செயலாளர்.

2-522

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : வே போவர்ட் எனர்ஜி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103561
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 108/11, வட்டரப்பல பாதை, கல்கிசை

கம்பனிச் செயலாளர்.

2-534

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எகோ ஸோன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 103502
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015, சனவரி 26
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 481, சுனேத்ரா தேவி வீதி, பெபிலியான, கொஹுவள, நுகேகொடை

2-521

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : செஃப்பெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 103416
*கூட்டிணைப்புத் திகதி* : 22.01.2015
*பதிவு முகவரி* : இல. 494/ஏ, நாவல வீதி, ராஜகிரிய

கம்பனிப் பணிப்பாளர்.

2-520

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எட்வன்ட் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பீவீரி) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 65857
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 321, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2008, ஒற்றோபர் 13

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலுஷன்ஸ் அன்ட்
செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

*2-619*

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : வென்ட்வர்த் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 100035
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.08.01
*பதிவு முகவரி* : இல. 24/3ஏ, எம்பரர் ரெஸிடென்ஸீஸ் கிரஸன்ட் சிட்டி, கொழும்பு 3

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

*2-598*

## ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வர்தன வங்கி**
(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***26274 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபற்று, மாபிமயில் அமைந்துள்ள தெல்கஹலந்தேவத்த என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எட்வர்ட் ஈ விஜேசூரிய அவர்களால் வரையப்பட்ட 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 1610 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு, அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 33.63பே.)***

**மேலே குறிப்பிடப்பட்ட காணி, பின்வரும் காணியின் மீள் அளவை செய்யப்பட்டதாகும் :**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபற்று, மாபிமயில் அமைந்துள்ள தெல்கஹலந்தேவத்த என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட 10975 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு, அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட் டுள்ளது.**

**மேலே 10975 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட காணியின் ஊடாகச் செல்லும் காணி, பாதை உரிமையுடன்.**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 3றூ. 02.5பே.)***

*(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதியிடப்பட்ட 26274 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் களனி, கோணவெலயில் வசிக்கும் புஞ்சிஹேவகே மனோஜ் சமிந்த ஜயலத் மற்றும் பொத்தாவெல கங்கானம்கே பிரசாந்தி திமல்கா ஆகியோரால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ (முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி) க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 83,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

''முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.''

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

2-583

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – நீர்கொழும்பு கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

**அட்டவணை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், தாசியபத்து அலுத்குரு கோரளையில் கட்டுநாயக்க-சீதுவ நகர சபை எல்லையில் முக்கலன்கமுவ கிராமத்தில் அமைந்துள்ள கொழும்பு-நீர்கொழும்பு வீதி, கட்டிட இல. 385 இல் அமைந்துள்ள 'ருக்காஓவிட்ட' என்ற காணிக்கு நிலஅளவையாளர் கே. ஏ. எப். பெர்னாந்துவினால் 2007.02.26 ஆந் ஆந் திகதியுடைய தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 6622/2007 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1.**

**காணியின் விஸ்தீரணம் : ஒரு றூட் சைபர் தசம் இரண்டு ஏழு பேர்ச் (0ஏ. 1றூ. 0.27பே.)**

**மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தும் சேர்த்து.**

என்னால் மேற்சொல்லப்பட்ட காணி பகிரங்க ஏலத்தின் மூலம் 2015, மாச்சு மாதம் 13 ஆந் திகதி (13.03.2015) மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2014.12.19 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2015.02.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2015.02.23 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.-** சீதுவை சந்தியிலிருந்து நீர்கொழும்பு-கொழும்பு றோட்டில் 100 மீற்றரில் இக்காணி உள்ளது. இது 385 ஆம் இலக்கம் கொண்டதும் இந்த வீதியின் வலப்பக்கத்தில் உள்ள காணியுமாகும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.-** வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) வெற் வரி.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது நீர்கொழும்பு கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 24-26, பெர்னாந்து அவெனியூ, நீர்கொழும்பு. தொலைபேசி இல. : 031-2231814, 031-2233955 ; தொலைநகல் இல. : 031-222709.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.

2-568

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — திருகோணமலை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**வியாபாரத்திற்கு/பண்டகசாலைக்குப் பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

**திருகோணமலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காவடிகுடா கிராமத்தில் திருகோணமலை-கண்டிப் பாதையின் எல்லையில் அமைந்துள்ள காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. செல்லபிள்ளை என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.11.30 ஆந் திகதிய 4054 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக் கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கண்டிப் பாதை, வரிப்பண இல. 49 எனும் மாடிக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும்**

**(பரப்பளவு : 46 பேர்ச்)**

*(இவ்வாதனம் கொகு ஹென்னதிகே சந்தன அநுரகுமார மற்றும் கொகு ஹென்னதிகே சன்ஜீவ அநுரகுமார ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- *திருகோணமலை பிரதான பஸ் நிலையத்திலிருந்து பிரதான தெரு ஊடாக சுமார் 1 கி. மீ. தூரம் பொலிஸ் நிலைய சந்தி வரை வந்து வலதுபக்கமாகத் திரும்பி கண்டிப் பாதையில் பிரவேசித்து சுமார் 6 கி. மீ. தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*இவ்வாதனம் 2015.03.10 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2014.10.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.11.13 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- *வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-*

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

*கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- *சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.*

ஐ. டப்ளியு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

2-555

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — திருகோணமலை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட தொகுதி இல. 8 இல் ஏகாம்பரம் பாதையில் அமைந்துள்ள காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஆர். பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப் பட்ட 1992.04.13 ஆந் திகதிய 132 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் ஏகாம்பரம் பாதை வரிப்பண இல. 654/2 (முன்னர் 654) எனும் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 30.10 பேர்ச்)**

*(இவ்வாதனம் ஆர். ஆர். மார்க்கட்டிங் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும் நை. மீ. ராஜ்மோஹன் மற்றும் நை. மீ. இராமநாதன்பிள்ளை ராஜ்ராம் மோஹன் ஆகியோர் ஈட்டாளர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- *திருகோணமலை பிரதான பஸ் நிலையத்திலிருந்து ஏகாம்பரம் பாதையில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் சென்று வலது பக்கத்தில் அமைந்துள்ள பாதையில் பிரவேசித்து அதில் சுமார் 50 மீற்றர் சென்றால் இப்பாதையின் இடதுபக்கத்தில் பாதைக்கு எதிர்த்ததாக இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*இவ்வாதனம் 2015.03.10 ஆந் திகதி பி. ப. 3.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2014.11.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.11.24 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

2-553

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — அநுராதபுரக் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**வசிப்பிடத்துக்குப் பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

***அநுராதபுர நகர மத்திக்கு மற்றும் விமான நிலையத்திற்கு மிகவும் அண்மித்த நுவரவெவ கிராமத்தில் அநுராதபுரம்-கவரக்குளம் பிரதான பாதைக்கு எல்லையாக அமைந்துள்ள கொடஇடம எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பிரியந்த சமரதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.11.09 ஆந் திகதிய 2004/411 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப் பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அத்துடன் அதனுள் அடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.***

**(பரப்பளவு : 39.54 பேர்ச்)**

*(இவ்வாதனம் துமிந்த தயாசென் ரட்டியால என்பவர் கடப்பாடு டையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- அநுராதபுரம் கடபனஹவில் இருந்து விமான நிலையப் பாதையில் சுமார் 1 கிலோ மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையின் இடதுபக்கமாக அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2015.03.10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.12.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2009.03.17 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து), உள்நாட்டு வரி 1% (ஒரு வீதம்), ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை), நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா.

சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%, விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இல் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- பிரதான முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661821, 011-2661815.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 077-7761706, 081-2210595.

2-554

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — கிரிந்திவெல கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***அத்தனகல்ல பிரதேச சபை மெகொடபொத உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஹப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள மீகஹவத்தை எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. கொட்டம்பகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008.07.19 ஆந் திகதிய 226எச்/2008 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம்***

**பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள் அடங்கும் வீட்டுக் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.**

***(பரப்பளவு : 2ஏ. 2றூ. 12.6பே.)***

*(இவ்வாதனம் கனேஅச்சி பதிரென்னேஹேலாகே இனோகா அசங்கி மற்றும் கனேஅச்சி பதிரென்னேஹேலாகே தயானந்த ஆகியோர் கடப்பாடுடையோராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- யக்கல நகரத்திலிருந்து கிரிந்திவெல பாதையில் (பாதை இல. 231) சுமார் 10 கிலோ மீற்றர் வத்துருகம-பின்வத்தை சந்தி வரை வந்து இடதுபக்கம் அமைந்துள்ள ஹப்பிட்டிய பாதைக்குத் திரும்பவும். இந்தப் பாதையில் சுமார் 1.25 கிலோ மீற்றர் தூரம் வரை சென்றதும் பாதைக்கு வலது பக்கம் முன்பாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2015.03.12 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.07.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2013.09.05 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சிரேஷ்ட முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

2-557

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — கண்டி கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**கண்டி, கங்கவட்ட கோரளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சுதுஹும்பொல கிராமத்தில் அமைந்துள்ள ஹீரஸ்ஸகல எஸ்ட்டேட் எனும் ரிச்மன்ட் ஹில் எஸ்ட்டேட் கிரிவனஹேன எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ஆர். ஏ. த ஜே. செனவிரத்ன என்பவரினால் 2012.10.10 ஆந் திகதி உறுதிசெய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எல். கே. ஜயசுந்தர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.10.11 ஆந் திகதிய ஜே1475 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப் பட்ட லொட் 98 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் சகலதுமாகும்.**

***(பரப்பளவு : 91.2 பேர்ச்)***

*(இவ்வாதனம் ரனசிங்ஹ முதியன்சேலாகே ஹர்ஷ சுயான் மங்கலநாத் விமலரத்ன பண்டார ரனசிங்ஹ என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- கண்டி நகரத்திலிருந்து உடுவெல-ஹந்தான பாதையில் கண்டி அரசினர் வைத்தியசாலையைக் கடந்து சுமார் 1.5 கி. மீ. தூரம் சென்று வலது பக்கமாகச் சந்திக்கும் தபோதாராம பாதைக்குப் பிரவேசிக்கவும். இப்பாதையில் சுமார் 750 மீற்றர் தூரம் சென்று மேலும் 300 மீற்றர் தூரம் மணிக்கூட்டு கோபுரச் சந்தி வரை வந்து இங்கிருந்து வலதுபக்கமாகத் திரும்பி சுமார் 30 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாகவுள்ள பாதைக்குப் பிரவேசித்து சுமார் 20 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையின் வலதுபக்கத்தில் அமைந் துள்ளது.

இவ்வாதனம் 2015.03.09 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.12.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.12.30 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி,

விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

2-556

---

**மக்கள் வங்கி (விசேட சொத்துக்கள் பிரிவு)**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

**அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம் :**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளேபத்து, மொறட்டுவை மாநகர சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள இல. 129/3, மொறட்டுவெல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள வளவ்வ என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். மெண்டிஸ் அவர்களால் வரையப்பட்ட 1974 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 520 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 9 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 19.76பே.)**

**மேலே கூறப்பட்ட 520 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, துண்டு 11 ஊடாகச் செல்லும் பாதை உரிமையுடன், அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக, கொழும்பு காணிப்பதிவகத்தில் எம் 1157/158 எனும் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**மேலே கூறப்பட்ட மொறட்டுவெல்லயில் அமைந்துள்ள கிரிபெல்லகஹவத்த மற்றும் கஹட்டகஹவத்த என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டபிள்யூ. டி மெல் அவர்களால் வரையப்பட்ட 1960 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 1443 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப் பட்டதுமான காணித்துண்டு**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 17.87பே.)**

**கொழும்பு காணிப்பதிவகத்தில் எம் 1251/190 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**மேலே கூறப்பட்ட, மொறட்டுவெல்லயில் அமைந்துள்ள கிரிபெல்ல கஹவத்த மற்றும் கஹட்டகஹவத்த என அழைக்கப்படும் 1443 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு டி2 ஊடாகச் செல்லும் பாதை உரிமையுடன்**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 04.13பே.)**

**இந்த வீதியின் ஊடாக வாகனப் போக்குவரத்துச் செய்வதற்கும், குழாய்களைப் பொருத்துவதற்கும் தேவையான உரிமையுடன், அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக, கொழும்பு காணிப்பதிவ கத்தில் எம் 713/135 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு குமுதினி சுஜாதா ஜாகொட அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 1995 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 210 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் தில்பிரிய என்டர்பிரைசஸ் எனும் பெயரில் பங்குடைமை வியாபாரத்தை நடத்திவரும், ஹப்புஹென்னதிகே சந்திரா மாலனி பெரேரா மற்றும் மஹவடுகே நளின் தர்மேந்திர பெரேரா ஆகியோரால் மக்கள் வங்கியில் அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

**தீர்மான அறிவித்தலுக்கு**.- தயவுசெய்து 2008, ஒற்றோபர் மாதம் 3 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலையும், 2008, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிய ''தினமின'', ''சிலோன் டெயிலி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் கொழும்பு 2, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள விசேட சொத்துக்கள் பிரிவு (அறவீடுகள்), பிரதம முகாமையாளரிடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இலக்கம் : 011-2481680 அல்லது 011-2481382 ; தொலைநகல் இல. 011-2431033.

காணி உறுதியின் பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால்,

ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% வீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

2-581

---

## செலான் வங்கி பீஎல்சீ - ஜா-எல கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*"கடன்பட்டோர்/அடமானதாரர்" என்ற வகையில் ஜா-எலவைச் சேர்ந்த பாலசூரிய அப்புகாமிலாகே மேரி பிரசீற்றா பெரேரா என்பவருக்காக ஜா-எல பதிவு அலுவலகத்தில் இல. என்(பீவீஎஸ்) 31451 இல் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய ஏன்ஜல் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.*

### ஏலவிற்பனை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் பதிவுப் பிரிவுக்குட்பட்ட அளுத்கோரள ராகம்பத்துவில் நகரசபை எல்லைக்குட்பட்ட பிரிவில் வெலிகம்பிட்டியவில் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 50, 50/1 மற்றும் 50/ஏ இல் அமைந்துள்ள "ஹல்கஹாகும்புர" என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு ஏ, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஈ. ஜே. பி. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்டு 2000.07.25 ஆந் திகதி யிடப்பட்ட நிலவரைபட இல. 6507 இல் துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் முப்பத்தெட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 38.75பே.) விஸ்தீர ணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2015, மாச்சு 19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் என்னால் விற்பனை செய்யப்படும்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- ஜா-எல இல் இருந்து கொழும்பு-நீர்கொழும்பு வீதி மார்க்கமாக கொழும்பு நோக்கி வருகையில் வெலிகம்பிட்டியவுக்கு 1. கி. மீ. இற்கு முன் வேவல, சேர்ச் வீதியில் திரும்பி சுமார் 150 மீ. தூரத்திற்கு சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலது கைப்பக்கமாக வீதியின் அருகில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.11.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.11.07 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" மற்றும் 2014.10.30 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட் களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொ.பே. இல. 24564753, 2456480.

மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்.

துசித கருணாரத்ன (ச.நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 011-3068185, 2572940.

2-561

---

## செலான் வங்கி பீஎல்சீ - காலி கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*(கடன்பட்டோர் என்ற வகையில் காலியைச் சேர்ந்த டெமுனி சுனில் ரூபரெட்ன டீ சில்வா மற்றும் டெமுனி சஹான் மதுஷ்கா என்பவர்களுக்கு*

வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

**ஏலவிற்பனை**

தென் மாகாணம், காலி மாவட்டத்தின் பிரதேச செயலக நான்கு கூழலிற்குட்பட்ட வட்டரேகவில் அமைந்துள்ள "கொஹோபன்வத்த" அல்லது "பொது உடுமல்ல" என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு 11 அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஆர். பேசி விஜயசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 2012.01.03 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 003/2012 இல் துண்டு 11 எனக் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப் பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 19.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

தென் மாகாணம், காலி மாவட்டத்தின் பிரதேச செயலக நான்கு கூழலிற்குட்பட்ட வட்டரேகவில் அமைந்துள்ள "கொஹோபன்வத்த" அல்லது "பொது உடுமல்ல" என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு 17 வீதி ஒதுக்கீட்டிற்காக அதனூடாகவும், அதன் மீதாகவும் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எல். பி. நாணயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்டு 1991.08.27 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 9636 இல் துண்டு 17 முப்பது தசம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 30.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2015, மாச்சு 20 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் என்னால் விற்பனை செய்யப்படும்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**– காலியில் இருந்து கொழும்பு வக்வெல வீதி மார்க்கமாக சுமார் 4.2 கி. மீ. தூரத்திலுள்ள மாம்பிட்டிய சந்திவரை சென்று இடதுபக்கமாக உள்ள போபெ-வட்டரேக வீதியால் திரும்பி சுமார் 60 மீ. தூரத்திற்குச் சென்றால் வலது பக்கத்தில் உள்ள கொகொம்பன் வத்த வீதியால் சுமார் 20 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து அமைந்துள்ளது. இந்தச் சொத்து வீதியின் வலதுகைப் பக்கத்தில் வரிமதிப்பீட்டு இல. 66/28, வட்டரேக-போபெ வீதியில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**– 2014.12.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.11.13 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" மற்றும் 2014.10.30 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**– வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட் களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, இல. 90, காலி வீதி, கொழும்பு 03" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொ.பே. இல. 24564776, 2456480.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்".

துசித கருணாரத்ன (ச.நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 011-3068185, 2572940.

2-562